எனது இல: என்ஈபி/சிஓ/ஜீஎன்/05
திகதி : 23.06.2004.

சுற்றறிக்கை இல: 07/2004

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள
சகல ப.நோ.கூ.சங்கங்களினதும்
தலைவர்/பொது முகாமையாளர்களுக்கு.

மொத்த நிலையத்தின் பொருள் குறைவு மேலதிகம் தொடர்பான
1982 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் 21ந் திகதி கொண்ட
208 இலக்க சுற்று நிருபத்திற்கான விளக்கம்.

இச்சுற்றறிக்கை மூலம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மொத்தக் களஞ்சியத்தில் மட்டும் ஒரே காலத்தில் ஒரே வகையான பொருட்களில் ஏற்படும் குறைவு மேலதிகத்தினை பெறுமதி அளவில் எதிர்வரவு வைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான காரணமும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் கூட்டுறவுச் சங்கங்கள் இச்சுற்று நிருபத்தை தவறான வழிகளில் பயன்படுத்துவதாக எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துகையில் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்படும் விபரங்களை பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்குச் சமர்ப்பித்து அவரது எழுத்து மூலமான அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முன்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய செயற்படத்தவறும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் நெறியாளர்களுக்கும் எதிராக கூட்டுறவுச் சட்டத்திற்கமைய செயற்பட வேண்டி நேரிடலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இ. இளங்கோவன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், (வகிமா)

பிரதி: சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர்களுக்கும். — தகவலுக்கும் நடவடிக்கைக்குமாக.

/கிம.